Registered as a News Paper in Ceylon
P M G No. H A 80/300 of 1939,

# இந்துசாதனம்

விரோதி வருஷ (1889) ஆவணி மாதம் 28 ௳ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத்-௬௩.] யாழ்ப்பாணம்:- கரவருட புரட்டாதி ௴ ௧௯ ௳ வெள்ளிக்கிழமை (5 அக்டோபர் 1951) [இல.-௫0]

## ஒரு பெண்ணின் வீரச் செயல்

அதுட்கமகொலை என்ற இடத்தில் ஆறருேத்தில் விளையாடிக்கொண்டு நின்ற 3 வயசுப் பிராயமுள்ள ஒரு பெண் குழந்தை காந்தி ஆற்றுக்குள் தவறி விழுந்துவிட்டது. அப்போது அவ்விடத்தில் யாரும் நிற்கவில்லை. சிறிது நேரஞ் சென்றபின் வீட்டில் வேறு யாருமின்றித் தனித்திருந்த நூசிநோனு என்பவள் வெளியே வந்தபோது பிள்ளை கட்டாற்றில் தத்தளித்துக்கொண்டிருப்பதைக் கண்டாள். உடனே அவள் ஆற்றுக்குள் குதித்து மிக்க பிரயாசத்துடன் பிள்ளையை மீட்டு அதன் உயிரைக் காப்பாற்றினள்.

## வாலாஜாபாத் இந்துமத பாடசாலை

புதுக்கட்டடத் திறப்பு விழா

செப்டம்பர் 15-ம் 16-ந் தேதிகளில் மேற்படி பாடசாலைப் புதுக்கட்டடத் திறப்புவிழா நடைபெற்றது. சென்னை மாகாணக் கிராம வளர்ச்சிப்பகுதி மந்திரி B. பரமேசுவரன் B. A. தலைமை வகித்தார். உணவுப் பகுதியிலுள்ள இராவ் பகதூர் M. A. குற்றாலலிங்கம்பிள்ளை B. A. திறந்து வைத்தார். கட்டடச்செலவு ரூபா 32,000. அரசினர் உதவிய ரூபா 16,000; மிகுதி ரூபா 16,000 தையும் அக்குள்ள பெருமக்கள் எண்மர் உதவினர்கள்.

## தோத்திரம்

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

நன்றே வருகினுந் தீதே விளைகினு நானறிவ
தொன்றேயு மில்லை யுனக்கே பரமெனக் குள்ளவெல்லா
மன்றே யுனதென் றளித்துவிட் டேனழி யாதகுணக்
குன்றே யருட்கட லேயிம வான்பெற்ற கோமளமே.

திருச்சிற்றம்பலம்

அழியாத குணக் குன்றே - அநாதியாக ஒரு சிறிதுஞ் சலியாத குணமேருவே, அருட்கடலே - கிருபாசமுத்திரமே, இமவான் பெற்ற கோமளமே - இமயமலை யரசன் பெற்ற என்றும் இளமைச் செவ்வி வாய்ந்த அபிராமி தேவியே, எனக்கு உள்ள எல்லாம் அன்றே உனது என்று அளித்துவிட்டேன் - எனக்கென்றுள்ள உடல் பொருளாவி மூன்றையும் தமியேனுக்குத் தேவரீர் காட்சி கொடுத்தருளிய அன்றைக்கே உம்முடையவைகள் என்று சமர்ப்பித்து விட்டேன், ஆதலால், நன்றே வருகினும் - நன்மையே சம்பவிக்கினும், - தீதே விளைகினும் - (அல்லது) தீமையே சம்பவிக்கினும், நான் அறிவது ஒன்றேயும் இல்லை - அவைகளைக் குறித்து நான் சிந்திக்கத்தகுவது ஒன்றுமினுமில்லை, உனக்கே பரம் - என்பாரமெல்லாம் உமக்கே பாரம் என்பது பொருள்.

உனதென்பது பன்மை யொருமை மயக்கம். "அன்றேயென் றனுவியு முடலு முடைமை யெல்லாமுங் - குன்றேயனையா யென்னையாட்கொண்டபோதே கொண்டிலையோ - வின்றோரிடையூறெனக் குண்டோ வெண்டோண் முக்க ணெம்மானே, நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ விதற்கு நாயகமே." எனப் பிறருமிங்ஙனங் கூறுதல் காண்க.

அபிராமிதேவியே, என் உடல் பொருளாவி மூன்றையும் அன்றே உமக்கென்று தமியேன் சமர்ப்பணஞ் செய்துவிட்டேனாதலால் என் பாரமெல்லாம் நும்பாரமே யாதலின், நிகழும் நன்மை தீமைகளைக் குறித்து நான் சிந்திக்கற்பால தொன்றேனுமில்லை என்பதாம்.

## க்ஷயரோகத்தைத் தடுக்கும் முயற்சி

றங்கூனில் வைத்தியத் தொழில் சம்பந்தமாய் மூன்று நாட்கள் நிகழ்ந்த சமாஜத்தில் ஆசிய தேசங்களிலிருந்து சென்ற க்ஷயரோக வைத்திய நிபுணர்கள் 15 பேர் சமுகமாயிருந்தனர். இச் சமாஜத்தில் க்ஷயரோகத்தைத் தடுக்கும் ஊசிமருந்தின் உபயோகத்தை (B. C. G. Vaccination) தென் கீழ் ஆசிய தேசங்களிலும் மேற்குப் பசிபிக் தேசங்களிலும் புகுத்துதற்கும் பரப்புதற்கும் கைக்கொள்ளப்பட வேண்டிய வழிவகைகள் ஆராயப்பட்டன. உலக சுகாதார தாபனம் (W.H.O.) முதலிய தாபனங்களும், பர்மா அரசாங்கமும் ஒன்று சேர்ந்தே இச் சமாஜம் கூட்டப்பட்டது. தென்கிழ் ஆசியாவில் பல தேசங்களிலுமுள்ள வைத்திய நிபுணர்கள் க்ஷயரோகத்தைத் தடுக்கும் வழிகளை முறையாக ஆராயும் பொருட்டு முதன் முதற் கூட்டப்பட்ட சமாஜம் இதுவே யாகும். இக் கொடிய நோய் பல தேசங்களில் விரைந்து பரவுதற்குக்

## விளக்க மறியற்காரருக்குச் சில சௌகரியங்கள்

விளக்க மறியலில் வைத்திருக்கப்படுவோரின் சிரமத்தைக் குறைத்தற் பொருட்டு அவர்களைக் கடுங்காவலில் அடைத்து வைத்திருத்தலின்றி மறியலைச் சிறிது இலகுவாக்குதற்கு வேற்ற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அவர்கள் விரும்பிய வேலையில் பிரதானமாய்க் கைவேலைகளில் ஈடுபட்டிருக்க அனுமதிக்கப்படுவார்கள். பொழுது போக்குக்குரிய ஒழுங்குகளும் அளிக்கப்படும்.

காரணங்கள் வறுமையும், சத்துள்ள உணவுக் குறைவும், குடியிருத்தற்குச் சௌகரியமான வீடுகளின்மையுமாம். வைத்திய சௌகரியங்களின்மையுமே யென இச் சமாஜத்தைத் திறந்துவைத்த பேர்மிய சமூகசேவை மந்திரி கூறினர். முந்தி வராதவர்களுக்கு இனிமேலும் வராதபடி தடுத்தற்கு உபயோகிக்கப்படும் ஊசி மருந்து (B.C.G.) சகாயமான விலையுள்ளதாயிருத்தல் ஓர் பெருஞ் சலாகைய மெனவுங் கூறினர்.

## தக்ஷிணாமூர்த்தி

### திரு. நரசிம்மன் கூற்று விபரீதமுடைத்து

II

பூர்த்த இலங்கையிலிருந்து சமயவாதஞ் செய்யும்படி சிதம்பரத்திற் சென்றபௌத்தகுரு மாணிக்கவாசகசுவாமிகளை நோக்கி "உங்கள் சிவன் யோகியாக விருத்தற்குக் காரணமென்ன? மாதொருத்தியைப் பாகத்தில் வைத்துக்கொண்டும், பாதி ஆண் பாதிபெண்ணாகிய அர்த்தநாரீசுவர வடிவத்தைக் கொண்டும் இல்லறத்தவரா யிருப்பதற்கு ஏது என்ன? உங்களிறைவன் இல்லறத்திலிருப்ப அந்த இறைவனுடைய மெய்யடியவரென்று சொல்லும் நீர் துறவறத்தைக் கடைப்பிடித்த காரணமென்ன" என்று ஆட்சேபித்தபோது, மாணிக்கவாசகசுவாமிகள் புன்னகை செய்து அப்பௌத்த குருவுக்குப் பின்வருமாறு விடையிறுத்துள்ளார்:—

"பாகமதில் உத்தமியை
வைத்தல் பழுதென்றாய்
போகமுல குக்கருள்
புரிந்தருள என்றே
மாகமுகில் ஒத்தகுழல்
மங்கைபோ டிருந்தான்
யோகமுயிர் கட்குதவ
யோகவடிவானான் "

பௌத்த குருவே, எங்கடவுள் தம்பாகத்தே உமாதேவியை இருத்தியருளியது குற்றமென்று கூறினாய், அபக்குவ ஆன்மாக்களுக்குப் போகமூட்டித் தொலைத்துப் பாகம் (பக்குவம்) வருவித்தற் பொருட்டே, ஆகாயத்திற் சஞ்சரிக்கும் முகிலையொத்த கரிய கூந்தலையுடைய உமாதேவியோடுகூடிப் போக வடிவாயிருந்தார்; பக்குவான்மாக்கட்கு யோகமுத்தி யுதவுதற் பொருட்டு யோகவடிவாயிருந்தருளினர் என்பதாம். அபக்குவான்மாக்களைப் பார் உலகு என்றும் பக்குவான்மாக்களையும்பர் உயிர் என்றும் கூறினர். மேலும்,

"போகியா யிருந்துயிர்க்குப்
போகத்தைப் புரிதலோரார்
யோகியாயிருந்து முத்தி
யுதவுதலதுவு மோரார்
வேகியானாற் போற்செய்த
வினையினை வீட்டலோரார்
மூகியா மூடரெல்லாம்
உம்பர் லொருவனென்பார்."

என்ற திருவாக்கினால் இறைவன் (தக்ஷிணாமூர்த்தி)யோகத் திருவடிவங்கொண்ட அருளின் திறத்தை மூடர்கள் அறியாரென்பது கொள்ளக் கிடக்கின்றது. "அநாதியே தொடர்ந்த கன்மங்களனைத்தும் அநுபவித்தன்றித் தொலையாமையானும், அக்கன்மங்களனைத்தையும் இயற்றுதற்கு இச்சையே முக்கிய கருவியாதலானும், அவ்விச்சை தான் பெரும்பான்மையும் காமரூபத்தில் அந்தர்ப்பவித்தலானும், அக்காமம் இவ்வுலகத்துப் பெண்களால் அடையப்படுதலானும், உலகானுக்கிரக சத்தியே ஈண்டு உமையாகிய பெண்ணாக ரூபிகரித்தமையானும், அச்சத்தியோடுகூடி உத்தியோகித்துப் போகமூர்த்தியும், அவ்வனுக்கிரகம் பெற்ற பின்னர் அச்சத்தி வேண்டப்பட்டமையின் அச்சத்தியினின்றும் பிரிந்து யோகமூர்த்தி ஆயினாரென்பதுகஞ்சைவத்து உள்ளுறையென்க; இன்னோரன்ன சைவத்து உள்ளுறைகளை உய்த்துணராமையிற் பரசமயிகள் தம்முட் பிணங்கித் தத்தமக்குத் தோன்றியவாறெல்லாங் கூறி இங்ஙனம் இடர்ப்படுவராயினர்; ஈண்டுச் சத்தியென்பதற்கு வல்லமையென்பது பொருளன்றிப் பெண்ணென்பது பொருளன்று...." என்பது திருவாதவூரடிகள் புராண விருத்தியுரை.

குறித்த நரசிம்மனும் பரசமயமாகிய வைஷ்ணவ சமயத்தவராதலின் இங்ஙனம் இடர்ப்படுதல் அதனமன்று.

இனி தக்கன்யாக விஷயமாகவும், ஈசுவரி அவன் செய்த யாகநெருப்பில் வீழ்ந்திறந்தனளென்னும் விஷயமாகவும் திரு நரசிம்மன் கூறியவை சமயத் துவேஷத்தினெழுந்த சிவநிந்தையே யல்லாமல் உண்மையன்றென்பதை எடுத்துக் காட்டுதும். இறைவனைப் புறக்கணித்துத் தக்கன் செய்த யாகத்தில், அவனுக்கு நன்மதி புகட்டி அவனை ஈடேறச் செய்யலாமென்ற திருவுளக் கருத்தோடு ஈசுவரி பெருமானிடத்து விடை பெற்றுக்கொண்டு அங்குச் செல்லவும், அத்தக்கன் எம் பெருமாட்டியையும் இறைவனையும் இகழ்ந்தான்; அதனாற் பிராட்டியார் திருவுளத்திற் சிறமுற்று அவன் யாகம் அழியக் கடவதெனச் சாபமிட்டு மீண்டு இறைவரிடம் வந்து அவன் யாகத்தைச் சிதைத்து அவனுக்கு மறக்கருணை செய்தருளுக என வேண்ட, இறைவன உடனே வீரபத்திரக் கடவுளைத் தோன்றச் செய்து தக்கன் யாகத்தைச் சிதைத்து ஆங்குச் சென்றிருந்த தேவர் முனிவர் முதலானோரையுந் தண்டிக்கும்படி பணித்தருள, இதற்கிடையில் இறைவி பத்திரையெனப்படுங் காளிதேவியைத் தோற்றுவித்து அவ்வீரபத்திரக்கடவுளுடன் ஏவ, இருவரும் பரிசனருடன் சென்று திருமால்முதலாந்தேவர்களையும், அந்த யாகசாலையிலிருந்த முனிவர் முதலானோரையுந் தக்கவாறு தண்டித்தனர்; பின்னர்ப் பிரமாவின் வேண்டுகோளின்படி சிவாஞ்ஞை பெற்ற வீரபத்திரக் கடவுள் மாண்ட தக்கனுடைய உடம்பிலே தலைமாத்திரம் எரிந்து போனமையினால், ஆட்டுத் தலையைப் பொருத்தி அவனையும் உயிர் பெற்றெழச் செய்தனர்; இதன் விரிவைக் கந்தபுராணத்துள்ள தக்ஷகாண்டத்திற் படித்துக் காண்க.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். கர ஹு புரட்டாதி மீ ௧௯ உ வெள்ளிக்கிழமை

## புடைவை துணிகளை :: :: :: :: விருத்திசெய்யும் நோக்கம்

இந்த இலங்கை ஒரு காலத்தில் தன் மக்களுக்கு வேண்டிய புடைவை துணிகளையும், அவற்றிற்கு முதற் காரணமாகவுள்ள நூலையும், அந் நூலுக்கு முதற் பொருளாயுள்ள பருத்தியையும் தன்னிடத்திற்றானே ஆக்கியுதவியதோடு இந்தியா முதலிய வேற்றூர்களுக்கும் பருத்தி முதலியவற்றை ஏற்றுமதி செய்து வந்ததென்பது இந் நாட்டின் பழையசரித்திரத்தைக்கொண்டு அறியக்கிடக்கின்றது; இந்தியாவிற்குப் பருத்தியை ஏற்றுந் துறைமுகமாக விருந்தமையினாலேயே "பருத்தித்துறை" என்னும் பெயர் வட இலங்கையிலுள்ள துறைமுகங்களுள் ஒன்றுக்கு வழங்கலாயிற்றென்று காலங்கண்ட முதியோர் காரணஞ் சொல்லக் கேட்டுள்ளோம்; தமிழரசர்கள் மாத்திரமல்லர் பறங்கியர் ஒல்லாந்தர் இத்தீவின் சுற்றுப் பிரதேசங்களை ஆண்டுவந்த காலத்தும இந் நாட்டு மக்கள் இயன்றவரையில் பருத்தியைவிருத்திசெய்து, நூல் நூற்றுப் புடைவை நெசவு செய்து உபயோகித்து வாழ்ந்தார்களெனவும், பட்டு, சருகை வஸ்திரங்களே இந்தியாவிலிருந்து இங்கு இடையிடையே இறக்குமதியாயின வெனவும் உணர்ந்து கொள்தற்குச் சில ஏதுக்களுண்டு; பிருத்தானியர் இந்த இலங்கையைக் கைப்பற்றிய ஆரம்பகாலத்திலேயும் அப்படியே நடந்துவந்தது; வடமராட்சிப் பகுதியிலுள்ள பல பழைய இல்லங்களில் அக்காலத்தில் நூல்நூற்றற்கு உபயோகிக்கப்பட்ட இராட்டினம் பிற்காலத்தில் உபயோகித்தலின்றி ஒரு மூலையிற் கிடந்ததை நாம் நேரிற் பார்த்துள்ளோம்.

காலகதியில், பிருத்தானியர் சீமைத் துணிகளென்று சொல்லப்படும் இலவம்பஞ்சுகொண்டு யந்திரங்களில் ஆக்கப்பட்ட புடைவை துணிகளைத் தம் நாட்டிலிருந்து இறக்குமதி செய்து மலிந்த விலைக்கு விற்கத் தலைப்பட்ட பின்பே, இங்குள்ள நெசவுத் தொழிலாளர் நூல்நூற்போர் முதலானோர் தாம் செய்யுந் தொழில் "கட்டாது" எனக் கண்டு அதனைக்கைவிடலாயினர்; காலஞ்செல்லச்செல்ல, இந்தியாவிலிருந்தும் பிருத்தானியாவிலிருந்தும் இங்கே புடைவை இறக்குமதி செய்யப்படுவதோடுமில்லாமல், யப்பான் அமெரிக்கா முதலான தேசங்களிலிருந்தும் வரைவின்றி இறக்குமதி செய்யப்படலாயின; மக்களும மலிவாகப் புடைவை துணிகளை வாங்கி உபயோகித்து வந்தார்கள்; ஆனால் உலக இரண்டாம் யுத்தம் நேர்ந்த காலத்தும் அதன்பின்பும், முழு உலகத்தின் நிலைமை முற்றாய் மாறித் தரித்திரம் உணவுப்பஞ்சம் உடைப்பஞ்சம் முதலிய அகர்த்தங்களெல்லாம் விளையத் தொடங்கியபின்புமே, "பட்டாலறிவன் சண்டாளன்" என்றபிரகாரம், பஞ்சத்தின் உறைப்பையுணர்ந்து உணவுப் பொருளையும் உடைக்குரிய பொருள்களையும் இலங்கையரசினர் தாமாக ஆக்கிக் கொள்ளலாமென முயற்சி செய்கின்றனர்; இம் முயற்சி இடையூறின்றி வளர்ந்துவரினும் கைகூடப் பல வருடங்கள் செல்லும்; அதனால் ஊக்கங் குன்றவொண்ணாது; கருமங் கைகூடும் வரை முயல்வதே முறையாகும்; அந்நியநாடுகளிலிருந்து இங்கு இறக்குமதியாகும் துணிகள் முன்னிருந்ததைக்காட்டிலும விலையேறிக்கொண்டன.

இவைகளையெல்லாம் உத்தேசித்துப்போலும், இலங்கையரசினர் இந்தியா, யப்பான் முதலிய நாடுகளிலிருந்து இப்போதைக்கு இயன்றவரையில் நூல் தருவித்துக் கைத்தறி மூலமாகப் புடைவைகளை நெசவு செய்தற்கும், இந்நாட்டிலுள்ள அம்பாந்தோட்டை முதலிய இடங்களிலே பருத்திச்செடியை விருத்திசெய்து தம்பொறுப்பில் தொழிற்சாலையை நிறுவி நூல் நூற்றற்கும் இப்பொழுதுமுயற்சி செய்கின்றனர்; இந் நோக்கங்கள் கைகூடுமானால் இலங்கையிலுள்ள உடைப்பஞ்சம் காலகதியிலே தேய்ந்து போய்விடுமெனக் காத்திருக்கலாம்.

## மது நீக்கக் கொண்டாட்டப்போது தவறணை வீழ்தல்

கொழும்பு புறக்கோட்டையிலுள்ள சாராயம் கள்ளு புறநாட்டு மதுபானம் என்பன விற்கப்படும 17 கடைகள் மதுநீக்க அபிமானிகளின் முயற்சியால மூடப்பட்டுவிட்டன. இவ் வெற்றியை மதுநீக்க அபிமானிகள் கொண்டாடிக்கொண்டிருக்கையில், சென்ற்போல் வட்டாரத்திற் செக்கடித் தெருச் சந்தியிலுள்ள கள்ளுத் தவறணைக் கடை பொறிந்து விழுந்து விட்டதாம்.

## வேதாகம சாஸ்திர பரிபாலன சபை

நிகழும் புரட்டாதிமீ ௬-ந்தேதி (22-9-51) சனிக்கிழமை பகல் 3½ மணியளவில் டக்டர் க. குருசாமியின் தலைமையில் தேவாரபாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயது. பல ஊர்களிலுமுள்ள பிராமணக் குருமார், சைவக்குருமார், சைவ ஆசிரியர்கள், இளைப்பாறிய உத்தியோகத்தர் முதலிய பலர் அங்குச் சமூகமாயிருந்தனர். முதல் சென்ற கூட்ட வரலாறு வாசித்து அங்கீகாரமானது. சபையின் விதானங்களை ஆக்கும்படி நியமித்திருந்த உபசபையாரோடு இன்னும் சில அங்கத்தவர்களைச் சேர்த்துத் திருத்திய முறையில் விதானங்களை அமைக்கும்படி தீர்மானிக்கப்பட்டது. மேலும், வேதசிவாகமங்களைப் பதிவசக்காகக் கொண்ட சைவர்களே இதில் அங்கத்துவம்வகிக்க உரிமையுடையவர்களெனவும், பொது அங்கத்தவர்கள் வருடம் ஒன்றுக்கு 6 ரூபாவீதமும், அதிகாரசபையினர் வருடம் முப்பதுரூபாவீதமும் கட்டணம் செலுத்தவேண்டுமெனவும் தீர்மானமாயது. இனி இச்சபையின் போஷகராக, புத்தூர் திரு. மனவராயர் கந்தையாவின் பேரனும் திரு. சிவசம்பு சிற்றம்பலம என்பவரை ஷெ சபையார் ஏகமனதாகத் தெரிவு செய்துள்ளனர்.

வேதாகம சாஸ்திர பாடசாலை ஒன்றை வைத்து நடத்துவதற்கு நல்லூரிலுள்ள வெள்ளிக் கிழமை மடத்தைத் தந்துதவும்படி அதன் சொந்தக்காரரிடஞ் சென்று கேட்டு ஒழுங்கு செய்வதற்காக ஒரு உபசபையும், பணஞ் சேர்ப்பதற்காக ஒரு உபசபையும் மேற்படி சபையாரால் தெரிவுசெய்யப்பட்டன. அங்கத்தவர்சிலர் மேற்படிபாடசாலையை நடத்துவதற்கு நல்லூர் வெள்ளிக் கிழமைமடத்தை உதவும்படி கேட்டபோது மேற்படி மடஅதிகாரியாகிய திரு. சி. சிற்றம்பலமும் ஏனைய பங்காளரும் மனப்பூர்வமாக மேற்படி கட்டடத்தை உதவவுடன்பட்டு வாக்களித்தனர். —கடித.

## யாழ்ப்பாணம் உயர்தர நீதிமன்ற விசாரணை

யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோட்டு விசாரணையெனப்படும் உயர்தர நீதிமன்ற விசாரணை வழக்கம்போல் நகர மண்டபத்திலே இத்தவார ஆரம்பத்திற் றொடங்கியுள்ளது; நீதியரசர் சுவான் விசாரணைநடத்துவார்; இவ் விசாரணைப்போதில் விளங்கித் தீர்ப்புச் சொல்லவேண்டிய வழக்குகள் 8; இவற்றுள் 4 கொலை சம்பந்தமான வழக்குகளாகும்; முதன்முதல் விசாரணைக்கு எடுக்கப்பட்ட வழக்கு காரைநகர் வடக்கிலுள்ள இளையவன் முருகேசன், வேலன், செல்லன் முருகேசன் என்பவர்கள் சிதம்பரி வைத்திலிங்கத்தைக் கொலைசெய்ய எத்தனித்தார்களென்ற குற்றச்சாட்டியுள்ளது; இவ்வழக்குச் சிறிது விசாரணை செய்தபின் எதிரிகள் நிரபராதிகளெனக் கண்டு தள்ளப்பட்டது.

## யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிர்த்திச் சங்கம்

### பாலபண்டித, பண்டித வகுப்புகள்

இவ்வகுப்புகள் ஒக்ரோபர் மாசம் 10-ந் திகதி புதன்கிழமை மாலை 4 மணி தொடங்கி முறையே வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்திலும் மாலை 5 மணி தொடங்கிச் சுன்னாகம் சதாசிவ பிராசீன பாடசாலையிலும் தக்க ஆசிரியர்களின் பொறுப்பில் சனி ஞாயிறு வாரங்களிலும் ஏனைய நாட்களிலும் மாலையில் நடைபெறுமெனவும், சங்க உப தலைவர்களி லொருவரான சு. நடேசபிள்ளை இவ்விருஇடங்களிலும் வகுப்புக்களை ஆரம்பித்து வைப்பாரெனவும் சேர விரும்புபவர்கள் அன்று வந்து தங்கள் பெயர்களைப் பதிவித்துக்கொள்ள வேண்டுமெனவும் மேற்படி சங்கக்காரியதரிசி (மல்லாகம்) திரு. அ. சரவணமுத்துதெரிவிக்கின்றார்.

## சிவஞானபோதச் சொற்பொழிவு

முற்றொடர்

— திரு. V. P. காந்திமதிநாதபிள்ளை அவர்கள் —

முதல்வன் நியதி இன்றி உயிர்கட்குப் பேதப்பட்ட சரீரங்களைத் தோற்றுவிப்பானென்பது பொருந்தாது. எல்லா உயிர்களையும ஒன்றுபோல நடத்தும் முதல்வன் அவ்வுயிர்கள்பால் யாதுங் காரணமின்றிப் பேதம் செய்யான். ஆகவே இத்தேகங்களை நியதிப்படுத்துதற்கு ஏதுவான காரணமொன்றிருத்தல் வேண்டும். இந்நியதி காரணமே வினையெனப்படும்.

வினை என்பதற்குச் செயல் என்பது பொருள்; ஒவ்வோருயிரும் தூல தேகத்தோடு கூடியுள்ளபோது பலவித செயல்களைச் செய்யும். இச்செயல்களை விருப்பு வெறுப்போடும் செய்யும்; விருப்பு வெறுப்பின்றியும் செய்யும்; விருப்பு வெறுப்பின்றிச் செய்யப்படும் செயல்கள் தூலதேகத்தை மாத்திரம் தாக்குவனவாதலால், சித்துப் பொருளாகிய உயிரைத் தாக்கா. விருப்பு வெறுப்போடு செய்யப்படும் செயல்களோ அறிவினையும் தாக்குவனவாதலால், உயிர்களையும் பற்றித்து அவ்வுயிர்கள் இறக்கும் காலத்து அவற்றின் சூக்கும தேகங்களில் தங்கி நின்று அவ்வுயிர்கட்குச் சுகதுக்கங்களாகிய பலன்களை நியதியிட்டுக்கொடுக்கும். இவ்வாறு பலன்களைத் தந்தவைபோக எஞ்சிய வினையே, அச்சூக்கும தேகங்களினின்று, தனித்தனி தோன்றும் தூலதேகங்களையும், அத்தூல தேகங்களோடு கூடியகாலத்து அநுபவிக்கும் இன்ப துன்பங்களையும் நியதிப்படுத்தும். இவ்வினை இரு திறப்படும். அவை நல்வினை தீவினையென்பன. இவ்விருவினைகளும் பிறவிதோறும் உயிர்களால் ஈட்டப்பட்டுவரும். இவ்வினைகள் பொருளல்லவாயினும், உயிர்கள் இவ்வினைகளை இயற்றும்படி செய்வதான காரணம் ஒன்றுண்டு. இக் காரணந்தான் மூலகன்மம் என்று சொல்லப்படும். இம் மூலகன்மம் வியாபகமாயுள்ள சூக்கும சடப்பொருள். இதுவும் அநாதியேயுள்ளது. இது தன்னுள் இருவேறு கூறுயிருப்பதால் இதனால் இயற்றப்படும் வினைகளும இருவகைப்படும். இவ்வினைகட்கு ஏற்பவே ஒவ்வோருயிரும் தேகத்தினை எடுப்பதும் விடுப்பதுமாம். அதாவது உயிர்களின் பிறப்புக்களை நியதிப்படுத்துவது அவ் வுயிரின் வினையே. அவற்றின் இறப்புக்களை நியதிப்படுத்துவதும அதுவே. இவ் விறத்தல் பிறத்தல்களுக்கு நடுவே உயிர்கட்கு வரும் சுகதுக்கங்கட்கு நியதி காரணமும் அதுவேயாம். இக் கருத்துக்களையெல்லாம உணர்த்தவே இச் சூத்திரம் 'போக்குவரவு புரிய' என்றமட்டும் ஓதாது 'இருவினையிற் போக்குவரவு புரிய' என ஓதியது.

# பெண்மணிக்கு இரண்டுவாரச்சிறை

## 7 வயதுச் சிறுமியி னுடம்பில் 60 தழும்பு

"என்பெயர் சுமணவதி; வயசு 7; பல மாசங்களாக இந்த எதிரி வீட்டில் வேலை செய்துகொண்டிருக்கிறேன்; கோழிக்கூடு சுத்தம்பண்ணுதல், வீடு பெருக்குதல், வீட்டிலுள்ள கட்டில், மெத்தை, கதிரையென்னு மிவைகளைத் துடைத்தல் ஆகியவைகளே நான் ஒவ்வொரு நாளுஞ் செய்யவேண்டிய பணி; என் பாட்டனார்தான் என்னைக் கொண்டுவந்து இவர்களிடம் வேலை செய்ய விட்டவர்; வேலை செய்யத் தவறினால், இல்லையேற் சரியாகச் செய்யாவிட்டால் என் எஜமாட்டி எனக்கு அடிப்பாள்; இடையிடையே எஜமானனும் அடிப்பதுண்டு; பசிக்கொடுமையினால் ஒருநாள் நான் கொஞ்சச் சோற்றைக் காணாமல் அள்ளித் தின்றுவிட்டேன; அதற்காகவும் கள்ளியென்று சொல்லி என்னை அடித்தார்கள். அடிபடாத நாள் ஒருநாளுமில்லை" என்று சுமணவதியென்னும 7 வயசுச் சிறுமி கப்பகா நீதிபதி முன் முறையிட்டாள்; வியாங்கொடையில் வசிக்கும் எதிரியாகிய கிறேக்கறியென்பவருடைய மனைவி சாட்சியஞ் சொன்னபோது, தான் ஒவ்வொரு நாளும் அடிப்பதில்லையெனவும், செய்காரியத் திருத்தத்திற்காக இடையிடையே தண்டிப்பது நிசந்தானென்றுஞ் சொன்னாள்; டக்ரர் குறித்த சிறுமியின் உடம்பைச் சோதித்தபோது அறுபது தழும்புகள் பட்டிருக்கக் கண்டார்; சில தழும்புகள் ஏழு, ஐந்து ஒன்றன்மே லொன்றாகச் செறிந்திடப்பதாகவுஞ் சொன்னார். நீதிபதி எதிரியைப் பார்த்து "நீ பெண்ணாய்ப் பிறந்தவளென்ற காரணத்தினாற் சிறிது யோசிக்கிறேன்; ஆணாயிருந்தால் 6 மாசத்திற்குக் குறையாமற் சிறைத் தண்டனை விதித்திருப்பேன்; நீ செய்த சித்திரவதை பொல்லாதது; இவைகளையெல்லாம் உத்தேசித்து உனக்கு இரண்டு வாரச்சிறையும் 100 ருபா அபராதமும் விதிக்கிறேன்; அபராதம் இறுக்கப்படுமானால் அதில் 50 ருபா குறித்த சிறுமிக்குக்கொடுக்கப்படவேண்டும்" என்று தீர்ப்புச்செய்தார். எதிரிக்கு வயசு 28 எதிரி பகுதியார் "அப்பீல்" கேட்கின்றனராம்.

# நமது சோதிடப்பகுதி

— ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது —

## உங்களுக்குரிய இந்தவாரப் பலன்கள் (7-10-51—13-10-51)

**மேடராசி** அச்சவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

முயற்சிகள் இவ் வாரத்திற் சிறிது சோர்வடையும். எந்தக்கருமத்தைப்பற்றியும் தீர்க்கமாக நிச்சயிக்க முடியாது கவலைக்கேதுவான சிலமாறுதல்கள் நேரக்கூடும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம்கால்கள் ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்

முதலிரண்டு நாட்களிலும் அவதானமாக நடந்துகொள்க. தேகசுகக்குறைவும் மனக்கவலையுமுண்டு. புதன்கிழமை யின்பின் நல்லகாலம். வார முடிவில் சந்தோஷத்தோடும் ஆச்சரியத்தோடுங் கூடிய கருமம் நிகழக்கூடும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3,

பண வருவாயுண்டு. முக்கியிட்ட முதலினுல் இப்பொழுது லாபங்கிடைக்கும். அந்தரங்க பகைவரால் குடும்பக்குழப்பம், அல்லல்கள் நேரக்கூடும். திங்கட்கிழமை இரவு தொடக்கம் புதன்கிழமை முடியச் சாவதானமாகநடந்துகொள்ளவும். புதன்கிழமை கழிந்தபின் நல்லகாலம்.

**கடகராசி** புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்.

நண்பர்களோடுகூட நல்லகிழமை. நன்மைக்காகிய மாறுதல்கள் செய்யவேண்டின் இவ்வார முற்பகுதியிற் செய்யலாம். வியாழன் வெள்ளிக்கிழமைகளில் அவதானமாக நடந்துகொள்ளவும். சனிக்கிழமை அநுகூலமான நாள்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1-ம் பாதம்.

இவ்வாரத்தில் அதிக சிரமப்பட்டுக் கருமமாற்றினாலும் அற்ப லாபந்தானுண்டு. ஆண்களுக்குப் பெண்களாலும் பெண்களுக்கு ஆண்களாலும் சுகமுண்டு. சனிக்கிழமை சாவதானமாக நடந்துகொள்க. விபரீதவிளக்கம், பிணக்குறுதல் முதலியவற்றை இயன்றவரையிலே தவிர்த்துக்கொள்க.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்.

இவ்வாரத்திற் புகழை ஈட்டிக்கொள்ளப்பல சந்தர்ப்பம் ஏற்படும். சனசமூக கருமங்களிலும் அநுகூலமுண்டு. வீண் விஷயமாகப் பொருள்செலவிட நேரும்.

**துலாம்** சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3-ம் பாதம்.

என்ன இடையூறு செய்தாலும் எடுத்த கருமங்கள் வெற்றியாம்; காத்திராத பிறராலுதவி கிடைக்கும்; புது முயற்சிகளைச் சிலகாலந் தவணையிடுக.

**விருச்சகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை,

இந்தக்கிழமை எதிர்பார்த்திராத சில லாபமுண்டு; மன ஆறுதல், காரியசித்தி என்னுமிவைகளுண்டு; எதிரிகளை வெல்லலாகும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1-ம் பாதம்.

உத்தியோகக் கடமையிற் பிணக்கு நேரக்கூடும். ஆனால் ஈற்றில் வெற்றியுண்டாம். பழைய நண்பர்களோடு சேர்வதால் மகிழ்ச்சியுண்டு.

**மகரராசி** உத்தராடம் 2 3 4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

வயசு முதிர்ந்த சுற்றத்தாரால் சில சங்கடம் நேரக்கூடும், ஆனால் அவை ஈற்றில் நீங்கிவிடும்; சுற்றமித்திரர்கட்கு உதவி செய்யும்படி வழிதவறிப்போனால் அபாயம் நேரும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4-ம் பாதம் சதயம், பூரட்டாதி 1-ம் 2-ம் 3-ம் பாதம்

உத்தியோக விஷயத்திற் சில சங்கடம் நோக்கூடும்; உடனிருந்து கடமையாற்றுபவர்களைக் குறை சொல்லவும் நினைக்கவொண்ணாது; குடும்பச் சங்கடங்களுமுண்டு.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

உத்தியோக ஸ்தானத்திற் பிணக்கு நேரக்கூடும்; குடும்பத்துள்ளும் விபரீத விளக்கமுண்டு; கிழமை முடிவில் நன்மையுண்டாம்; எதிரிகளை வெல்லலாகும்.

L K S LEBBAY BROS
GOLD HOUSE

தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

# திருக்கோணசலத் திருவுருவங்கள்

## ஊரெழுவில் வரவேற்பு

சென்ற செவ்வாய்க்கிழமை (2-10-51)மாலைமேற்படி திருவுருவங்களை திருவாளர்கள் ச. சம்பந்தர், வ. இராசா முதலியோருடைய விடா முயற்சியால் ஊரெழுவுக்கு எழுந்தருளச்செய்யப்பட்டன. இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாது இவ்வூர் வாசிகளெல்லாரும் திரள்திரளாக வந்து சேர்ந்து மேள வாத்தியத்தோடு ஊரெழுப் பிள்ளையார் கோவிலில் வரவேற்றனர். விசேட பூசையின் பின் பிரசாதம் முதலியன வழங்கப்பெற்றன; சிவஸ்ரீ ச. பாலசுந்தரக் குருக்கள் திருக்கோணேசர் பேரில் பாடிய அருட் பாக்களைத் தாமே படித்தனர்.

— கடித

# அருணந்தி சிவாச்சாரியார் குருபூசை

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை யாதாவில் இம்மாதம் கஅ உ (29-9-51) சனிக்கிழமை இரவு அச்சபையினது சைவாச்சிரம நாவலர் மண்டபத்தில் அருணந்தி சிவாச்சாரியர் குருபூசை நடத்தப்பட்டது. இரவு 7 மணி வரையில் கடவுளாராதனை, திருமுறைப் பூசை நடந்தபின் கீராவிமடம் ஸ்ரீமத் ந. சோமசுந்தரக்குருக்கள் அருணந்தி சிவாச்சாரியர் என்னும் பொருள்பற்றி ஒரு பிரசங்கம்' செய்தார்.

# கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு
வண்ணார்பண்ணை மேற்கு காலஞ்
சென்ற முருகப்பர் தம்பிஐயாவின் ஆதனத்துக்குத் தத்துவம்.

காலஞ்சென்றவர்.

தத்துவவழக்கு
இல- 1003

1. வண்ணார்பண்ணை மேற்கு கந்தையா நாகரத்தினமும் பெண்
2. டி நாகரத்தினம்

தத்துவகாரர்கள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 1003-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1951-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31-ந் திகதி புதன் கிழமை பிற்பகல் நாலுமணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில விற்கப்படும்.

**காணி விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கிறை புகுசென்ற உப்புக் குளங்கரையும் மற்று பிறிவுகளும் தெரப்பு 2 குளி $\frac{11}{32}$ எல்லை கிழக்கு கந்தப்பிள்ளை சிற்றம்பலம் வடக்கு N. S. சேதுராசாச்செட்டியின் உருமைக்காரர் மேற்கு வேலுப்பிள்ளை தாமோதரம்பிள்ளை தெற்கு பொது நிலத்தில் பாதைப் பங்கும் உரித்தும் கிணறும்.

ஆ. ச. கந்தையா
A. S. Kandiah
கொம்மிஷனர்.

காரைநகர்
25 - 9 - 51.
M 107 5 -10-51.

# ஏழாம் பாலபாடம்

இப்பாலபாடம் இப்பொழுது அவதாரிகை பரீட்சைக்ஷ வினுக்கள் இலக்கண விளக்கம் வினுக்களென்னுமிவைகள் அநுபந்தமாகச் சேர்த்து வெளியிடப் படலாயிற்று.

விலை சதம் 90

மனேஜர்.

# கனுத்துறையில் ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயமும் திருமடமும்

9-9-51 ல் கனுத்துறையில் கதிர்காமத்தொண்டர்சபையின் எட்டாவதாண்டு நிறைவுவிழா சேர். கந்தையா வயித்தியநாதன் தலைமையில் பழைய வீதி (old Road) 105-ம் நம்பர் இல்லமாகிய சபைமண்டபத்திற் கொண்டாடப்பட்டது. காரியதரிசி K. சாம்பமூர்த்தி சென்றவருட அறிக்கையை வாசித்தார். சபையார் சென்றபங்குனிமாதத்தில் அன்றுகொண்டாட்டம் நடைபெற்ற கட்டடத்தையும் காணியையும் ருபா 23000 க்கு வாங்கியதாகவும், சபையில் சேமநிதி அதிகம் இன்மையால் அதே கட்டடத்தை ஈடுவைத்துக் காணியின் கிரயத்தைச் செலுத்தியதாகவும் சைவப்பெரியார்களின் உதவியை நாடி அக்காணிக்கடனைக் கட்டி அக் கட்டடத்தை யாத்திரிகர் தங்குவதற்கு மடமாக்கவும், ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தை அமைக்கவும் அச்சபையார் தீர்மானித்துள்ளார்களெனவும் அவர் கூறினர். மேலும் இவ்வாண்டில் சபையார் ஆற்றும் பிரதான தொண்டாகிய கதிர்காம யாத்திரிகர்கட்குக் கனுத்துறை தெற்குப் புகையிரத ஸ்தானத்தில் சிற்றுண்டி வழங்கும் தொண்டு ஆற்றப்பட்டதென்றும், அதற்குப் பௌத்த இஸ்லாமிய அன்பர்களும் பண உதவிசெய்துள்ளார்களென்றும் கூறினர். பௌத்த அன்பர்களுக்குச் சிங்களத்தில் நன்றி கூறிச் சபையின் நோக்கங்களையும் விளக்கினர்.

அன்று திருவாளர்கள் C. பாலசிங்கம் C. C S. A. G. A. கனுத்துறை, S. இராசரத்தினம் D. J. பாணந்துறை, K. P. ஹாசன் வீரகேசரி ஆசிரியர், K. இராமச்சந்திரன், H. D. F. பெரேரு, S. T. சின்னத்துரை ஆகியோர் பேசுகையில் சபை ஆற்றும் தொண்டுகளைப்போற்றினர். தலைவர் சேர். கந்தையா வயித்தியநாதன் தமது முடிப்புரையைச் சிங்களத்திலும் தமிழிலும கூறினர். இந்து, பௌத்த, இஸ்லாமிய ஒற்றுமையைத் தான் இதற்கு முன் எங்கும் காணவில்லையெனவும் இதுபோல் எங்கும் இவ்வொற்றுமை பரவவேண்டுமெனவும தமிழர் சிங்களந்தெரியாமல் இருப்பதும், சிங்களவர் தமிழ் கற்காதிருப்பதும் பெரும்பிழையாகும் எனவுங் குறிப்பிட்டார். திரு. K. S. அருணந்தி "இறைவன் வழிபாடு" என்னும் பொருள்பற்றிச் சிறந்த சொற்பொழிவாற்றினர். ஈற்றில் சேர். கந்தையா வயித்தியநாதன திரு. K. S. அருணந்தி முதலிய பல பெரியார்கள் சபை நிருவாக உறுப்பினராகத் தெரிவு செய்யப்பெற்றனர்.

— கடித.

வியாபாரத்திற் கழகு
விளம்பரஞ் செய்தல்

இலங்கையின் மிகப் பெரி[illegible]
— நகை —
வியாபாரிகள்
= o =
தந்தி: "JEWELLERS"
போன்: 161,
ஸ்தாபனம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

## திருச்சி ரேடியோ

### ❋ இசைத்தட்டு

**திருச்சி சனி அக்டோபர் 6**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 கும்பகோணம் எம் ஆர் தர்மாம்பாள் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 காலைஇசை * 8 30 முடிவு.

1 சின்னஞ்சிறுவர்க்கு 1 30 ... ஹிந்தியில்செய்தி 1 50 ராஜன் வித்தார் கிளாரினெட் 2 தமிழில்செய்தி 2 10 ஆங்கிலப்பேச்சு 2 45 முடிவு.

1 சின்னஞ்சிறுவர்க்கு... — [see:] 1 நீங்கள்கேட்டவை* 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 ராஜன் வித்தார் கிளாரினெட் 2 தமிழில்செய்தி 2 10 ஆங்கிலப்பேச்சு 2 45 முடிவு.

மாலை 5 30 வித்தார் தில்ருபா ஆர் வி வித்வான்கள் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 திருச்சி ரேடியோவாத்யகோஷ்டி 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம் * 7 45 எம் எம் தண்டபாணி தேசிகர்பாட்டு 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 ஆங்கிலப்பேச்சு 9 30 உஸ்தாத் அலாவுதீன்கான் ஒலிப்பதிவு 10 முடிவு.

**திருச்சி ஞாயிறு அக் 7**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 இசைச்சுவடி ஒலிப்பதிவு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு

12 மேல்நாட்டு இசைத்தட்டுத்தொகுப்பு 12 30 ஞாயிற்றுக்கிழமை நிகழ்ச்சி 1 மணி மலர் 1 30 திருவெண்காடு சுப்பிரமணியபிள்ளை நாகஸ்வரம் * 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 குரல்வகை* 2 தமிழில்செய்தி 2 15 பெண்ணுலகம் 2 30 சென்டு இசைநிகழ்ச்சி 3 முடிவு

மாலை 5 30 கோமதி சங்கரய்யர் வீணை 5 45 எல் ஸ்ரீமதி பாட்டு 6 05 அறிவிப்புகள் 6 10 நீங்கள்கேட்டவை 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 முக்கால மண்பர்கள் பேச்சு 8 கோலார் ராஜம் பாட்டு 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 கோமதி சங்கரய்யர் வீணை 10 முடிவு

**திருச்சி திங்கள் அக் 8**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில்செய்தி 7 30 சாட்டியக்குடி ஆர் மீனாட்சிசுந்தரம் அம்மான் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம் * 8 30 முடிவு.

12 30 கல்லூரிப்பள்ளிகளுக்கு 1 நீங்கள்கேட்டவை 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 ரவிசங்கர் வித்தார் * 2 தமிழில் செய்தி 2 10 சாக்ஸபோன்* 2 15 ஆங்கிலப்பேச்சு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு 5 30 கே வி ராஜாராமய்யர் புல்லாங்குழல் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 திருச்சி ரேடியோவாத்யகோஷ்டி 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 போலா சங்கர்* 7 45 திரைப்பட விமர்சனம் 8 நாதவாத்ய கச்சேரி 8 15 கே வி ராஜாராமய்யர் புல்லாங்குழல் 8 30 அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் * 8 45 ஆங்கிலப்பேச்சு 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 சாட்டியக்குடி ஆர் மீனாட்சிசுந்தரம் அம்மான் பாட்டு 10 முடிவு.

**திருச்சி செவ்வாய் அக் 9**

காலை 7 10 ஆரம்பம்* 7 15 தமிழில் செய்தி 7 30 எம் சுப்பையா முதலியார் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 இசைவேளை * 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 குரல்வகை * 2 தமிழில் செய்தி 2 10 எ எஸ் ஐயலக்ஷ்மி பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 30 புதுசத்திரம் கே முத்து வீராசாமிபிள்ளை நாகஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 எம் சுப்பையா முதலியார் பாட்டு 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 ஐந்து வருஷத் திட்டப்பேச்சு 7 45 கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை வயலின் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 புதுசத்திரம் கே முத்து வீராசாமி பிள்ளை நாகஸ்வரம் 10 முடிவு


## பிரகடனம்

**திருவாதவூரடிகள் புராணம்**
உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன்
விலை ரூபா 2-00

**பிரதோஷவிரத மான்மியம் (புதிய பதிப்பு)**
சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரதகாலத்திற் சுவாமி கும்பிட வேண்டிய ஒழுக்கு, இதனை அநுட்டிக்க வேண்டிய முறை, புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது;
விலை சதம் 40

**வில்லி பாரதம்-புட்ப யாத்திரைச் சருக்கம்**
பண்டிதர், ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நன்பொருள் விளக்க விரிவுரை, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில் நடக்கும் தமிழ் ஆங்கில S. S. C. (எஸ். எஸ். ஸீ.) பரீட்சைக்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, (2-ம் பதிப்பு விலை ரூ. 1—25ச.

**அரிச்சந்திர புராணம் - மயானகாண்டம்**
மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக் குறிப்பு. நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன் உயர்தர வகுப்புக்களுக்குச் செய்யுட் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது.
விலை சதம் 75.

**மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன்**
மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயபாடப் பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாகவிதிக்கப்பட்டது.
விலை ரூ. 1—20 ச.

**உலகம்பலவிதக் கதை I. (கோபால நேசரத்தினம்)**
ஷை பண்டிதர் எழுதியது. படிக்கப் படிக்கத் தெவிட்டாதது.
விலை ரூ. 1—25 ச.

**ஈழமண்டல சதகம்:**
ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது; இலங்கையின் மான்மியத்தை எடுத்து விளக்குவது; விரிவுரையுடன் ... ... ரூ. 1·00
[சை]வ சமயசாரம்:
ஆசிரியர் ச. சிவபாதசுந்தரம் (B. A.) அவர்கள் எழுதியது. கொழு[ம்]ப்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றாயுள்ளது. விலை சதம் 45

**"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்)**
சைவப்பெரியார் ச. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத் தக்கது. முந்தி வெளிவராதது.
விலை 60 சதம் (அணா 10)

முற்பண மனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்

Apply: to
PANDIT V. T. SAMBANDHAN
Vannarponnai, Jaffna.



## சாலாமிஸ்ரி லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக்குறைவு, சூலை, சந்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீக்கும். தேகபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரிகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருறாத்தல் விலை ரூபாய் 25·00, அரைறாத்தல் விலை ரூபாய் 12-50
கால்றாத்தல் விலைரூபாய் 6·75

வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.
வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்

### சிவஞான பற்பொடி

சிவஞான பற்பொடியினுல் காலை பல் விளக்கி வந்தால், வாய்நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

**K. ஆறுமுகம்பிள்ளை**

எமது விலாசம் நி 8/1 தட்டாதெரு
M 92 கோட்டைமுனை, மட்டக்களப்பு



வந்திருக்கின்றன! வந்திருக்கின்றன!!

## திறமான தேக்கமரங்கள்

பல தினிசுகளிலும் வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
74 ஆஸ்பத்திரி றேட்
Std 2 யாழ்ப்பாணம்



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை.**
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**
எசகிந்த சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து எற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

**கடன்.**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49 சிருப்பர்.


Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Perakasa Press, Vannarponnai Jaffna, on Friday October 5, 1951